**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. இந்துமதி, கிரேடு 3 பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.293/2017** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | அருள் | **வயது** | : | 56 |
| **த.பெ** | : | வரதராஜன் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | முனியன்குடிசை | **தொழில்** | : | ஆசிரியர் |

**<u>28.10.2025 – வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1)**வா.சா.ஆ-1** களம்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 657/1992 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். **வா.சா.ஆ-1** ஆவணம் பதிவு செய்யப்பட்ட அதே தேதியில் தான் பிரதிவாதியின் தந்தைக்கு சர்வே நெம்பர் 175/9, 174/6 ஜானகிஅம்மாள்,ஆறுமுகம், சண்முகம் ஆகியோர் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சண்முகம் முதலியார், ஆறுமுகம் முதலியார், ஜானகிஅம்மாள், சங்கர் ஆகியோர் எனக்கு சர்வே நெம்பர் 175/9 மற்றும் மற்ற சர்வே நெம்பர்களில் பாகபிரிவினை செய்துகொண்டு எனக்கு சேரவேண்டிய சொத்தை வா.சா.ஆ-1 பாகபிரிவினை பத்தரம் மூலம் பதிவு செய்து கொடுத்த பின்பு மீதியிருந்த அவர்களின் சொத்தை சின்னப்பா மந்திரி(பிரதிவாதயின் தந்தைக்கு) விற்கிறார்கள். வா.சா-ஆ.1 ஆவணத்தை எழுதியவர் பாலசுப்பிரமணியன்.

2)பாலசுப்பிரமணியன் தான் 02.07.1992 ல் எழுதப்பட்ட கிரையபத்திரமும் எழுதினார். பாலசுப்பிரமணியன் **வா.சா.ஆ-1** ஆவணத்தை எழுதிய பிறகு படித்துகாண்பித்தாரா என்றால் படித்துகாண்பித்தார். பாலசுப்பிரமணியன் 02.07.1992 ல் கிரையபத்திரத்தை என்னிடம் படித்துகாண்பித்து நானும் சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் படித்துகாண்பிக்கவில்லை ஆனால் சாட்சி கையொப்பம் போட்டேன். ஒரு ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போடும்முன்பு எந்த ஆவணம் என்று பார்த்தேனா என்றால் நான் சாட்சி கையொப்பத்தை போடும்போது மேற்படி கிரைய ஆவணத்தை படிததுபார்த்து கையெழுத்துபோடவில்லை.

3)மேற்படி 02.07.1992 கிரையபத்திரம் நிறைவேற்றபட்ட அப்போதே அந்த ஆவணத்தின் சொத்தின் சுவாதீனமானது பிரதிவாதியின் தந்தைக்கு சென்றுவிட்டது என்றால் இல்லை, எங்களிடம் தான் சுவாதீனம் இருந்தது. அதற்கு பசலி, அடங்கல் ரசீது எதாவது இன்றுவரை உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் தாய் உண்ணாமலை பெயரில் உள்ள ரசீது **வா.சா.ஆ-2** ஆக தாக்கல் செய்திருக்கிறேன். 1992 லிருந்து 2002 வரை ஒரே ஒரு ஆவணம் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் **வா.சா.ஆ-2** ஆவணம் நாங்கள் தயாரித்து தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரியல்ல.

4)நான் கிரையபத்திரத்தில் சாட்சி கையொப்பம் போடும்போது படித்துபாரத்து தான் போட்டேன், ஆனால் இப்போது படித்துபார்க்காமல் சாட்சி கையொப்பம் போட்டதாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அ அட்டவணை சொத்துக்கள் பிரதிவாதிக்கு தான் பாத்தியப்பட்டது என்றும் நான் தவறான வழியில் தாவா சொத்துக்களை அடைய இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை எப்போது பிரதிவாதிகள் ஆக்கிமிப்பு செய்துள்ளார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் 1999 ஜீன் மாதம் கடைசிவாரத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கில் கூறியுள்ளேன். 02.07.1992 முதல் தாவா சொத்துக்கள் பிரதிவாதியின் அனுபவத்தில்தான் இருந்தது என்றும், தற்போது 1999 ல் ஆக்கிரமிப்பு செய்ததாக முரணாக கூறுகிறேன் என்றால் முரண் இல்லை.

5)நான் வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. காரணகாரியம் தவறாக தாக்கல் செய்துள்ளேன் மேலும் 1992 முதல் பிரதிவாதியின் தந்தைதான் தாவாசொத்துக்களை அனுபவித்து வந்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதியின் நெல்பயிர் வைத்து தற்போதுவரை சாகுபடி செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. ஊர்பெரியவர்கள் முன்னிலையில் சமரசம் பேசப்பட்டது என்றால் சரிதான். நான் தவறான சக்குபந்தியுடன் தாவா சொத்தை தாக்கல் செய்துள்ளேன் ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.10.29 11:03:08 +0530

District Munsif,
Polur.